மிக அவசரம்/தனிக்கவனம்

நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5

ந.க.எண். 58906/96/டி2

நாள். [illegible]

நகராட்சி அலுவலகம்,
21 AUG 2000

## சுற்றறிக்கை

பொருள்: மருத்துவ நல உதவித் திட்டம் – நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் பணியாளர் மருத்துவ நல உதவித் திட்டம் – சந்தாத் தொகை செலுத்தப்பட்ட விவரம் – சம்பந்தமாக.

பார்வை:
1. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். 58906/96/டி2 நாள். 19.2.96
2. காரைக்குடி நகராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண். இ1/674/98 நாள். 5.6.99.
3. துறையூர் நகராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண். 3106/2000/சி1 நாள். 24.5.2000

.....

பார்வை இரண்டு மற்றும் மூன்றில் காணும் கடிதங்களில் காரைக்குடி மற்றும் துறையூர் நகராட்சி ஆணையர்களால், பணியாளர்களிடமிருந்து மருத்துவ நல உதவி சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு மேற்படி தொகை அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை ஒன்றிலுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பணியாளர்கள் மருத்துவ நல உதவி சந்தாத் தொகையினை பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு "நகராட்சி நிர்வாக ஆணையர்" என்று வரைவோலையாக( Demand Draft ) எடுக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. பல நினைவூட்டுகள் மூலமும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் பணியாளர்கள் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட மருத்துவ நல உதவி சந்தாத் தொகையினை நகராட்சி நிர்வாக ஆணையர் என்ற பெயருக்கு வரைவோலையாக( Demand Draft ) எடுக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும். அரசு கணக்கில் மேற்படி தொகையினை செலுத்தக் கூடாது. மேற்படி செலுத்தப்பட்ட தொகை ஏதும் இருப்பின் அதனை மீளப் பெற்று அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் 1996–97 முதல் 2000–2001 ஆண்டு முடிய நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படாமலிருந்தும் சந்தாத் தொகையினை உடன் பிடித்தம் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் என்ற பெயருக்கு வரைவோலையாக( Demand Draft ) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) ந. சம்பத்குமார்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்கள்
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்

நகல்: அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்

31/7/2000